

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.12.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் ஃபெஞ்சல் புயல் காரணமாக பெய்த கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து கள ஆய்வு மேற்கொள்ள வருகை தந்துள்ள பல்துறை ஒன்றியக் குழு – ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் பேரிடர் மேலாண்மை இணை செயலாளர் முனைவர் இராஜேஷ் குப்தா, ஒன்றிய விவசாய மற்றும் உழவர் நலத்துறை இயக்குநர் முனைவர் கே. பொன்னுசாமி, ஒன்றிய நிதித்துறை இயக்குநர் சோனாமணி அவுபம். ஒன்றிய ஜல்சக்தி துறை இயக்குநர் ஆர். சரவணன், ஒன்றிய சாலை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை முன்னாள் பொறியாளர் தனபாலன் குமரன், ஒன்றிய எரிசக்தித் துறை உதவி இயக்குநர் ராகுல் பாட்ச்கேட்டி, ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குநர் பாலாஜி ஆகியோர் சந்தித்தனர். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (7.12.2024) முகாம் அலுவலகத்தில், கும்பகோணம் மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன் அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (7.12.2024) தலைமைச் செயலகத்தில், காவல்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை இயக்குநர்கள், கூடுதல் இயக்குநர்கள், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரியானா - ஷம்புவில் பேரணி!

# பேச்சுவார்த்தைக்கு அழைக்காவிட்டால் இன்று மீண்டும் போராட்டம்!

## ஒன்றிய அரசுக்கு விவசாயச் சங்கங்கள் கெடு!

புதுடெல்லி, டிச.8-

டெல்லியை நோக்கி செல்லவிடாமல் அரியானா சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள தடுப்புகளை விவசாயிகள் 2வது நாளாக அகற்றி வருகின்றனர். இதனிடையே, பேச்சுவார்த்தைக்கு அழைக்காவிட்டால் இன்று மீண்டும் போராட்டத்தை தொடர உள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

வேளாண் பயிர்களின் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டபூர்வ உத்தரவாதம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பஞ்சாப் அரியானா எல்லையில் உள்ள ஷம்பு என்ற இடத்தில் இருந்து விவசாயிகள் நேற்று முன்தினம் டெல்லி நோக்கி பேரணியை தொடங்கினர். தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த அவர்களை தடுத்து நிறுத்திய போலீஸார், அவர்கள் மீது கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் தடியடி நடத்தியும் கலைத்தனர்.

இதனால், போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் பலர் காயமடைந்தனர்.

விவசாயிகள் டெல்லி செல்லாமல் தடுக்க அரியானா அரசு அமைத்த முள்வேலி தடுப்பு, ஆணி தடுப்புகளை விவசாயிகள் இரண்டாவது நாளாக அகற்றி வருகின்றனர். இந்நிலையில், டெல்லிக்குச் செல்லும் போராட்டத்தை ஒரு நாள் ஒத்திவைத்திருப்பதாகவும், ஒன்றிய அரசு மாலைக்குள் பேச்சுவார்த்தைக்கு அழைக்காவிட்டால், இன்று மீண்டும் போராட்டத்தை தொடர உள்ளதாகவும் விவசாய சங்கங்களில் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

### தமிழ்நாட்டில்

# 3000 பட்டதாரி ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படுவர்!

## திருச்சியில் – பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி!

திருச்சி, டிச. 8-

தமிழக துணை முதல்வர், மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்ட, மாநகர, இளைஞர் அணியின் சார்பாக 47/3 மூன்றாவது நிகழ்வாக கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்வு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி பொற்கிழிகளை வழங்கி சிறப்பித்தார். தலைமை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெங்கடேஷ் குமார், மாநகர இளைஞரணி அமைப்பாளர் முத்து தீபக், நிகழ்வில் திருச்சி மாநகரச் செயலாளர்



மண்டல குழு தலைவர் மதிவாணன், தலைமைச் செயற்குழு வண்ணை அரங்கநாதன், இந்நிகழ்வில் மாவட்ட மாநகர இளைஞரணி துனை அமைப்பாளர்கள் பாலமுருகன் ரவீந்திரன், தேசிங்கு ராஜா, பொன்னாடி சாமிநாதன், விஷ்ணுவரதன், சையத் சாகிப், அல்லாஹ் பிச்சை, ரஞ்சித்,கண்ணன் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியாக நன்றியுரை மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் சரத்குமார் நிகழ்த்தினார்.

நிகழ்வுகளை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்த தினத்தை முன்னிட்டு ஏழை எளிய மக்களுக்கு குறிப்பாக தி.மு.க. மூத்த முன்னோடிகளுக்கு திருச்சி தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில், நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47 வது பிறந்த தினத்தை மக்களுக்கு பயனுள்ள விதத்தில் கொண்டாடி வருகிறோம்.

தற்போது அரசுப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

எனவே மாணவர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய சூழல் எழுந்துள்ளது.

தற்போது PT Assistant 3000 ஆசிரியருக்கான தேர்வு நடத்தப்பட்டு சான்றிதழ்கள் சரிபார்க்கும் பணி நிறைவடைந்து அவர்களுக்கு பணி வழங்கப்படக் கூடிய சூழலில் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள்தங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்ததன் காரணமாக 3000 பேரையும் பணி நியமனம் செய்ய முடியாத நிலை உருவாகி உள்ளது. இடைநிலைப் பள்ளி ஆசிரியர் காலிப் பணியிடங்கள் உள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக கண்டுகொள்ளப்படவில்லை. பணி நியமனத்திற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்களுக்கும் சேர்த்தே தேர்வு நடத்தியுள்ளோம்.

முதல்வரின் உத்தரவை பெற்று அவர்களுக்கும் பணி வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்.

### கேரள முதல்வர் பினராயி விஜயன் தலைமை! வைக்கம் நகரில்

# தந்தை பெரியார் நினைவகம் - நூலகம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

## கேரள மாநிலக் கழகத்தினருக்கு - அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் வேண்டுகோள்!

திருவனந்தபுரம், டிச. 8-

கேரள மாநிலக் கழக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் வைக்கம் நகரில் உள்ள தந்தை பெரியார் நினைவகம் புனரமைப்பு பணிகள் தமிழக முதல்வர் தலைவர் - தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் படி கடந்த நிதி ஆண்டில் தமிழக அரசு சார்பில் சுமார் ஒன்பதரை கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழக நெடுஞ்சாலை, பொதுப்பணித்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் செய்தித்துறைஅமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் நேரடி கண்காணிப்பில் நடைபெற்று வந்தது. அந்த பணிகள் நிறைவு பெற்று இப்போது தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகம் புதுப்பொலிவுடன் திறப்பு விழா காண தயாராக உள்ளது. அந்த நினைவகம் மற்றும் நூலகம் திறப்பு விழா வரும் 12.12.2024 வியாழன் அன்று காலை 10 மணியள



வில் கேரள மாநில முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் திராவிடர் கழக தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், தமிழக நெடுஞ்சாலை, பொதுப்பணித்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆகியோர் முன்னிலையில் தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி இந்தியாவின் முன்னணி மாநிலமாக தமிழகத்தை வழி நடத்தி செல்லும் எங்கள் இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து விழா பேருரை நிகழ்த்தி தந்தை பெரியார் அவர்கள் பெருமை உலகெங்கும் அறியும் வண்ணம் புகழ் பரப்ப உள்ளார்கள்.

### முதல்வருக்கு வரவேற்பு!

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள தமிழக முதல்வர் தலைவர் தளபதி அவர்கள் 11.12.2023 புதன் கிழமை காலை 9 மணியளவில் சென்னையில் இருந்து புறப்பட்டு கேரள மாநிலம் கொச்சியில் உள்ள நெடும்பாசேரி விமான நிலையம் வருகிறார்கள் அப்போது கேரள மாநில தி.மு.க. சார்பில் கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் (எனது) தலைமையில் மாவட்ட கழக செயலாளர்கள் போபன். கே.பேபி (எர்ணாகுளம்), அனீஷ் (திருவனந்தபுரம்), ரெஜிராஜ் (கொல்லம்),ஆதவன் (பத்தனம்திட்டா), முஜிபுர் ரகுமான் (ஆலப்புழா), இலியாஸ் (கோட்டயம்), சதாசிவம் (திருச்சூர்), மன்னன் (இடுக்கி), ஜாபர் (பாலக்காடு), சாஜிதா (மலப்புறம்), நஃப்ஸல் (கோழிக்கோடு) பூவாது (வயநாடு), மாநில தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், மாநில தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் விபின் முருகேசன், ஹரி குமார் மற்றும் சிற்றார் ரவிச்சந்திரன்,துரை பேச்சிமுத்து, அஜ்மல் பாபு, ஏ.ஆர்.காசிம், மாத்யூ , ரபீக்,அன்வர் அப்துல்லா, அபுபக்கர், மஜுத், சரீஃப், அருண், அச்சு பிலால், ராஜேஷ், ஷாலினி, அஜ்மல் மற்றும் அனைத்து முன்னணி மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் முன்னிலையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் கேரள மாநிலம் முழுவதும் உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன். அத்துடன் அடுத்த நாள் காலை 10 மணியளவில் கோட்டயம் மாவட்டம் வைக்கம் நகரில் தந்தை பெரியார் நினைவகம் திறப்பு விழா நிகழ்ச்சியில் கேரள மாநில தி.மு.க. சார்பில் திரளாக கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

